செய்தி வெளியீடு எண் : 2257 நாள் : 13.12.2022

<u>செய்தி வெளியீடு</u>

**கிராமப்புறங்களில் நலவாழ்வு மையங்கள் மூலம் தொலைதூர மருத்துவ சேவையை சிறப்பான முறையில் செயல்படுத்தியதற்காக ஒன்றிய அரசால் தமிழ்நாடு அரசிற்கு வழங்கப்பட்ட முதலிடத்திற்கான கேடயம் மற்றும் சான்றிதழ் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் காண்பித்து வாழ்த்து.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை இன்று (13.12.2022) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்கள் சந்தித்து, ஒன்றிய அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் உத்திரப் பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற விழாவில், கிராமப்புறங்களில் நலவாழ்வு மையங்கள் மூலம் தொலைதூர மருத்துவ சேவையை (Tele Consultation) செயல்படுத்தியதில் பெரிய மாநிலங்களில் (Larger States) இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றதற்காக வழங்கப்பட்ட கேடயம் மற்றும் சான்றிதழை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின் முக்கிய நோக்கமானது, அனைத்து மக்களுக்கும் குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்கு சுகாதார சேவைகள் அவர்களின் வீடுகளுக்கு அருகாமையில் செலவினம் ஏதுமின்றி கிடைப்பதேயாகும். அதனடிப்படையில் தமிழ்நாட்டில் 7,291 கிராம துணை சுகாதார நிலையங்கள் அனைவருக்கும் நலவாழ்வு நிலையங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 4,248 நிலையங்களில் செவிலியர்கள் இடைநிலை சுகாதார பணியாளர்களாக (Mid–Level Health Provider) ஒரு நலவாழ்வு மையத்திற்கு ஒருவரென பணியமர்த்தப்பட்டுள்ளனர். மற்றும் 2,448 நிலையங்களில் சுகாதார ஆய்வாளர்களும் கூடுதலாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அனைவருக்கும் நலவாழ்வு திட்டம் தமிழ்நாட்டில் 'மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்துடன்' ஒருங்கிணைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தில் பணியாற்றும் பெண் சுகாதார தன்னார்வலர்கள் (Woman Health Volunteers) தொற்றா நோய் கண்டறிதல், சிகிச்சைக்கான மருந்துகளை பயனாளிகளின் இல்லங்களில் வழங்குவதோடு அல்லாது அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின் கீழ் நலவாழ்வு மையங்களில் இடைநிலை சுகாதார பணியாளர்களால் வழங்கப்பட்டும் 12 ஒருங்கிணைந்த மருத்துவ சேவைகள் அனைத்தும் வசிப்பிடங்களில் மிக அருகாமையிலேயே பயனாளிகளுக்கு சென்றடைவதன் மூலம் தனிமனித செலவினம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராமத்திலும் சமூக அளவில் (Community Service) பெண் சுகாதார தன்னார்வலர்கள் (Woman Health Volunteers) மற்றும் சுகாதார ஆய்வாளர் அடங்கிய களப்பணியாளர்கள் குழு மூலமும் நலவாழ்வு மையங்களில் (Facility Based Service) பணியமர்த்தப்பட்டுள்ள இடைநிலை சுகாதார பணியாளர் (MLHP) மூலம் பல்வேறு சுகாதார மற்றும் மருத்துவ சேவைகளை சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் சிறப்புகளில் ஒன்றாக செயலி அடிப்படையில் தொலைதூர மருத்துவ சேவை (Tele Consultation) மூலம் பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் இடைநிலை சுகாதார பணியாளர்களால் (Mid-Level Health Provider) 22,58,139 நபர்களுக்கு 12 அக்டோபர் 2022 முதல் 8 டிசம்பர் 2022 வரை வழங்கப்பட்டது. தமிழ்நாட்டில் வழங்கப்பட்ட இச்சேவைகள் இந்தியாவில் முதலிடம் பெற்றுள்ளது.

மேற்கண்ட இச்சேவைகள் தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மக்கள் சுகாதார சேவைகளைப் பெறுவதற்காக நீண்ட தூரம் பயணிப்பதை தவிர்க்கவும், மருத்துவ செலவினங்களை குறைக்கவும், அடிப்படை மருத்துவ சேவைகள் எளிய வகையில் கிராம அளவிலேயே கிடைப்பதற்கும் வழிவகை செய்துள்ளது.

உத்திரப்பிரதேச மாநிலம், வாரணாசியில் அனைவருக்கும் நலவாழ்வு திட்ட நாளான டிசம்பர் 10 ஆம் தேதி நடைபெற்ற விழாவில், ஒன்றிய அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் கிராமப்புறங்களில் நலவாழ்வு மையங்கள் மூலம் தொலைதூர மருத்துவ சேவையை (Tele Consultation) செயல்படுத்தியதில் பெரிய மாநிலங்களில் (Larger States) இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்றதை பாராட்டி வழங்கப்பட்ட சான்றிதழ் மற்றும் கேடயத்தை தமிழ்நாடு அரசின் சார்பில் தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப. அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வாழ்த்து பெற்ற நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி. செந்தில் குமார், இ.ஆ.ப., தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர், மரு. டி.எஸ். செல்வவிநாயகம், தேசிய நலவாழ்வு குழும கூடுதல் இயக்குநர் டாக்டர் ஜெரால்டு ஆகியோர் உடனிருந்தனர்.

.........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in